வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
FWC
Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | அரசியல் விஞ்ஞானம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

- **01 முதல் 15 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.**

(1) அரசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்தும் கற்கைகளாவன

1) மக்கள், அரசாங்கம் மற்றும் அரசுகளுக்கிடையிலான தொடர்பு பற்றி கற்கை
2) சமூக அதிகாரத்தின் இயல்பும் அதன் மீதான வரையறைகளின் மூலங்களும்
3) அரசியல் வாதிகளின் சுயவாழ்க்கை விபரங்களை இணைக்கின்றது
4) மக்களின் அரசியல் நடத்தையை கற்கின்றது
5) ஆட்சியாளர்களும், அவர்களின் அதிகார தாபனங்களையும் கற்கின்றது

(2) அரசியலானது

1) ஜனநாயக வழிமுறையாகவோ, அல்லது ஜனநாயகமல்லாத வழிமுறையாகவோ அமையலாம்
2) அதிகாரப் போராட்டமானது முக்கியம் பெறுவதில்லை
3) பொதுவிவகாரங்கள் தொடர்பாக ஏற்படும் பொதுமைப்படுத்தப்பட்ட தீர்மானங்களின் வெளிப்பாடாகும்
4) யார், எதனை ,எப்போது, எவ்வாறு பெற்றுக்கொள்வர் என்பதனை தீர்மானிக்கும் செயன் முறையாகும்
5) அரசியல்வாதிகள், அரசியற்கட்சிகள் என்பன முக்கியம் பெறும் அரசியல் விளையாட்டாகும்.

3) நடத்தை வாதமானது

1) பிரித்தானிய அரசியல் விஞ்ஞானிகளால் வளர்த்தெடுக்கப்பட்டது
2) கோட்பாடுகளை முன்னிலைப்படுத்தாமல் அவதானிக்கத்தக்க மனித நடத்தைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது
3) 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் அரசியல் விஞ்ஞானத்துடன் இணைந்தது
4) எதிர்வு கூறல்களையும், அனுபவம் சார் கோட்பாடுகளையும் வளர்க்க முயற்சிக்கின்றது
5) விஞ்ஞான ரீதியான அறிவை அபிவிருத்தி செய்ய உறுதிப்படுத்தக்கூடிய விளக்கரீதியான கோட்பாடுகளை முன்னிலைப் படுத்தியது

4) அரசு என்பது

1) அரசியல் ரீதியாக ஒழுங்கமைத்த ஒரு சமூகமாகும்
2) இறைமையைப் பெற்ற ஒரே ஸ்தாபனமாகும்
3) அரசியல் விஞ்ஞானத்தின் மையக் கருவாகும்
4) தோற்றம், இயல்பு தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றது
5) மக்களின் ஒரு சாராரின் விருப்பினை வெளிப்படுத்தும் கருவியாகும்

5) இறைமை அதிகாரம் என்பது

1) அரசினுடைய தனித்துவமான உடமையாகும்

2) அனைத்து சுதந்திரமான அரசியல் சமூகத்திலும் இறைமை உள்ளது

3) ஒழுங்குமுறை எண்ணக்கருப்படுத்தியவர் ஜீன் போடின் ஆவார்

4) தற்கால மக்களாட்சி நாடுகளில் தனிமுதன்மையான மனிதனால் பிரயோகிக்கப்படுகின்றது

5) சட்ட ரீதியான இறைமையை ஜோன் ஒஸ்ரின் ஆதரித்துள்ளார்

6) அரசாங்கம் என்பது

1) அரசின் சார்பாக இறைமையை பிரயோகிக்கும் கருவியாகும்

2) அரசின் பொது நலன்களைச் செயற்பாடாக மாற்றும் அரசின்கரமாகும்

3) ஒரே தன்மையுமையவையாக அரசாங்கங்கள் அமைகின்றன

4) அரசையும் மக்களையும் இணைக்கும் கரமாகும்

5) சட்ட, நிறைவேற்று, நீதித்துறைகளைக் கொண்டதாகும்

7) தேசிய அரசு முறையானது

1) இன்று வரை ஒரே வகையான ஆட்சி நடைமுறைகளைக் கொண்டுள்ளது

2) 1648 வெஸ்பாலியா உடன்படிக்கை மூலம் அங்கீகரிக்கப்பட்டது

3) ஓர் இனத்திற்கு ஓர் அரசு என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது

4) திருச்சபையின் வீழ்ச்சியின் மூலம் ஆரம்பமானது

5) சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்களாகும்

8) சட்டத்துறை என்பது

1) தற்கால மக்களாட்சி நாடுகளில் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது

2) ஒற்றை மன்று அல்லது இருமன்ற முறைகளாக அமையலாம்

3) பிரதிநிதிகளைக் கொண்ட அதிகார ஸ்தாபமாகும்

4) சமூக நிறுவனங்களாலும், அமுக்கக்குழுக்களாலும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்

5) வரவு - செலவுத்திட்டத்தை அங்கீகரிக்கும் ஸ்தாபனமாகும்

9) நிறைவேற்றுத்துறை என்பது

1) அரசின் தலைவரையும், அமைச்சர்களையும் கொண்டதாகும்

2) சட்டங்களை உருவாக்கும் பணிகளையும் பொதுவாக மேற்கொள்ளலாம்

3) அரசாங்க மூன்று துறைகளிலும் பிரபல்யமான செயற்பாட்டாளராகும்

4) ஜனநாயக நாடுகளில் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்கு தெரியப்படும்

5) அரசாங்கமுறைகளுக்கு ஏற்ப, இதன் கட்டமைப்பு மாற்றமடையும்

10) நீதித்துறை என்பது,

1) சட்டங்களுக்கு விளக்கமளிக்கும் தாபனமாகும்
2) அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பாகும்
3) சுயாதீனமாகவும், நடுநிலையாகவும் செயற்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது
4) மேனிலை, கீழ்நிலை என இருவகை நீதிமன்றங்களைக் கொண்டமையலாம்
5) சமஷ்டி நாடுகளில் மத்திய மாநில அரசுகளின் சமரசம் செய்யும் பணி இதற்குரியதல்ல

11) அரசாங்கத்தின் அதிகாரத்திதைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளாவன,

1) வலுவேறாக்கம்
2) அரசியல் யாப்பு
3) பொலிஸ் மற்றும் சிவில் சேவை
4) நீதிப்புனராய்வு அதிகாரம்
5) எதிர்க்கட்சி

12) அரசியல், பொருளாதாரக் கருத்தியல்களின் படி அரசாங்கங்களை வகைப்படுத்தும் முறைகளாவன

1) நவதாரளவாத அரசாங்கங்கள்
2) சில்லோராட்சி அரசாங்கங்கள்
3) தாராள ஜனநாயக அரசாங்கங்கள்
4) சமூக ஜனநாயக அரசாங்கங்கள்
5) சோசலிச அரசாங்கங்கள்

13) அரசாங்கத்தின் சில பிரதான பணிகளாவன

1) ஆள்புல ஒருமைப்பாட்டை பாதுகாத்தல்
2) கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்தல்
3) வெளிநாட்டு உறவுகளைக் கொண்டு நடாத்துதல்
4) தனியார் துறை நிறுவனங்களின் முகாமைத்துவம்
5) தேசிய கௌரவத்தையும், நலனையும் மேம்படுத்தல்

14) ஒற்றையாட்சி அரசாங்கம் என்பது,

1) சிறிய மற்றும் ஒரே இனத்தை கொண்ட அரசுகளுக்குப் பொருந்துகின்றது
2) செலவு குறைந்த சிக்கலற்ற ஒரு முறையாகும்
3) ஒருமைத்தன்மையான சட்ட நிர்வாக முறைகளைக் கொண்டதாகும்
4) அரசாங்கத்தின் கொள்கைகளையும், செயலையும் தெளிவாக இனங்காணல்
5) பலவீனமான ஒரு மத்திய அரசாங்கம் உருவாகலாம்

15) சமஷ்டி அரசாங்கம் என்பது

1) மத்தியின் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள உதவும்
2) பெரிய அரசுகளை நிர்வகிக்க ஏற்றமுறையாகும்
3) யாப்பனூடாக அரசாங்க அதிகாரம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்
4) பிரிந்து செல்லும் எண்ணம் சட்டரீதியாக பிரதிபலிக்கப்படும்
5) பிரதேச மட்டத்தில் செறிந்துள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க உதவும்

The National e-Learning Portal for The General Education

✦ **16 முதல் 35 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் சரியானவையாகும். சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.**

16) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களின் பிரதான பண்புகளாவன,

A - காலம் தவறாத நியாயமான தேர்தல்கள்

B - தேர்தல் முடிவுகள் சரியானவையாகவும், வெளிப்படையானதாகவும் அமைய வேண்டும்

C - சுய சிந்தனைப்படி வாக்காளர்களின் தெரிவு

D - அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் மாத்திரம் வாக்களிக்கலாம்

E - பிரசைகள் விரும்பின் தேர்தலில் போட்டியிடும் சுதந்திரம் இருக்க வேண்டும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

17) மந்திரசபை அரசாங்க முறை என்பது

A - பாராளுமன்றிற்கும், மந்திரிசபைக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படல்

B - பெயரளவு மற்றும் உண்மை என்ற இரு நிறைவேற்றுப் பகுதிகள் செயற்படல்

C - சிறுபான்மை கட்சிகளும் ஆட்சியில் பங்கெடுக்க சந்தர்ப்பம் ஏற்படலாம்

D - இருகட்சி முறையின் கீழ் சிறப்பாக செயற்பட முடியும்

E - வினைத்திறன் குன்றிய சர்வாதிகார நிர்வாக முறையாகும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

18) ஜனாதிபதி அரசாங்கமுறை என்பது

A - விரைவான முடிகளும், அரசாங்கத்தின் உறுதிப்பாடும் காணப்படும்

B - அரசியற்கட்சிகளின் செல்வாக்கு கீழ்ப்படுத்தப்படும்

C - சிறப்பான ஜனநாயக ஆட்சிக்கான அடிப்படையாகும்

D - பாராளுமன்றிற்கும், நிறைவேற்றுத்துறைக்குமிடையிலான தொடர்பு சேய்மையானதாகும்

E - வலுவேறாக்கத்தின் அடிப்படையில் செயற்படும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

19) அரசியல் கட்சிகளானவை

A - மக்களையும், அரசாங்கத்தையும் ஒன்றிணைக்கும் ஊடகமாகும்

B - அரசியல் சமுதாயப்படுத்தலின் முகவரல்ல

C - சமூகத்தை முன்கொண்டு செல்லும் பிரதான செயற்பாட்டாளர்களாகும்

D - அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடுதல் பிரதான நோக்கமாகும்

E - ஜனநாயகமும், கட்சியும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

20) அமுக்கக் குழுக்கள்,

A - ஜனநாயக நாடுகளில் சுதந்திரமாகச் செயற்படுகின்றன
B - நலன் பேண் குழுக்கள் எனவும் கூறப்படும்
C - தமது உறுப்பினர்களின் நலன்களுக்காகச் செயற்படும்
D - தேர்தல் காலங்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அமைப்புகளாகும்
E - ஆட்சி அதிகாரத்தைப்பெற, கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்றன

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

21) அமெரிக்க அரசியல் முறையின் முக்கிய பண்புகளாவன

A - வலுவேறாக்கத்தோடு இணைந்த தடைகள் சமன்பாடுகள் முறை காணப்படல்
B - தலைமை நீதிமன்றத்திற்கு நீதிப்புனராய்வு அதிகாரம் காணப்படல்
C - பிரசைகளின் உரிமைகள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படல்
D - ஜனாதிபதியும், அமைச்சர்களும் நிறைவேற்றுத்துறையாக செயற்படல்
E - சமஷ்டி அரசாங்க முறையாக செயற்படல்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

22) பிரித்தானிய பாராளுமன்றம்

A - இருமன்ற அமைப்பைக் கொண்டதாகும்
B - பாராளுமன்றம் இறைமை பொருந்திய அமைப்பாகும்
C - இரு சபைகளும் சமமான அதிகாரங்களைக் கொண்டவையாகும்
D - நிறைவேற்றுத்துறையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றது
E - அரச நிதியின் கட்டுப்பாட்டாளராகும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

23) பிரான்சிய அரசாங்க முறையானது,

A - கலப்பு ஜனாதிபதி அரசாங்க முறையாகும்
B - ஐந்தாம் குடியரசு மூலம் தாபிக்கப்பட்ட முறையாகும்
C - பலமான நிறைவேற்றுத்துறை, பலவீனமான சட்டத்துறை என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
D - பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாவிட்டாலும் வெளிநபர்கள் அமைச்சராக முடியாது
E - பிரான்சை பலம் மிக்க தேசமாக்கி வெற்றிகரமான அரசாங்கமுறை டிகோலினால் தாபிக்கப்பட்டது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

24) இந்திய ஜனாதிபதி

A - மக்களால் நேரடியாக தெரியப்படுகின்றார்
B - நாம நிருவாகியாக செயற்படுவார்
C - அரசின் தலைவராவார்
D - அரசியல் திட்டத்தை பாதுகாக்கும் பொறுப்புடையவர்
E - ராஜ்யசபாவின் கூட்டங்களுக்கு தலைமை தாங்குவார்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

25) சுவிற்சர்லாந்து சமஷ்டி அரசாங்க முறையிலுள்ள சமஷ்டி மன்றமானது,

A - கூட்டு நிறைவேற்றுக் குழுவை நியமிக்கும் பொறுப்புடையது

B - சம அதிகாரங்களைக் கொண்ட இரு மன்ற முறையாகும்

C - உயர் சட்டவாக்க அமைப்பாகும்

D - சமஷ்டிப் பேரவை எனவும் அழைக்கப்படுகின்றது

E - இருமன்றுகளும் ஒன்றாக கூடுமானால் ஐக்கிய சமஷ்டி மன்று என அழைக்கப்படும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

26) பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியின் போது, சமூக விளைவுகளாவன,

A - தேசிய முதலாளித்துவ வர்க்கம் பலவீனமடைந்தமை

B - உயர் குழாம் வகுப்பின் அதிகாரம் தளர்வடைந்தமை

C - சாதிமுறை பலவீனமடைந்தமை

D - ஆங்கில மொழிச் செல்வாக்கால் ஏற்பட்ட சமூக அந்தஸ்து

E - கிராம, நகர இடைவெளி பரவலடைந்தமை

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

27) கோல்புரூக்கின் யோசனைகளாவன,

A - இராஜகாரிய முறையினை ஒழித்தல்

B - அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை ஒழித்தல்

C - இலங்கையர்கள் சிவில் சேவையில் சேர்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கல்

D - தேசாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல்

E - மலையகம், கரையோரம், தனி நிர்வாக அலகுகளாக இருத்தல்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

28) கமரனின் யோசனைகளாவன,

A - முழு நாட்டிற்கும் ஒற்றை நீதிமுறையை தாபித்தல்

B - உயர் நீதிமன்றத்தை மாவட்டங்களுக்கு விஸ்தரித்தல்

C - சிவில் நீதிமன்றங்களை தேசாதிபதியின் கட்டுப்பாட்டுலிருந்து விடுவித்தல்

D - உயர் நீதிமன்றத்தை பலப்படுத்தல்

E - எல்லோருக்கும் ஒரே முறைமையான நீதி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டமையும், நீதித்துறை சுதந்திரமும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

29) குறூ - மக்கலம் கோசனைப்படி

A - உத்தியோகப்பற்றற்றோர் அதிகரிக்கப்பட்டனர்

B - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகம்

C - சட்டசபைக்கு நியமனம் மூலம் 11 பேர் தெரிவாகினர்

D - படித்த இலங்கையர் சார்பாக ஒருவர் தெரியப்பட்டார்

E - தேர்தல் மூலம் 4பேர் தெரிவு செய்யப்பட்டனர்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

The National e-learning Portal for The General Education

30) இலங்கை தேசிய காங்கிரஸ்

A - பொறுப்பரசாங்கத்தை பெறுவதை இலக்காக கொண்டது

B - 1919 இல் உருவாக்கப்பட்டது

C - முதலாவது தலைவர் சேர். பொன் இராமநாதன்

D - இன, மொழி, பிராந்திய ரீதியாக பிளவுபட்டது

E - சுதந்திரப் பயணத்தில் சாதாரண மக்களை ஒன்றிணைப்பதில் தோல்வி கண்டது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

31) இலங்கையின் இடது சாரி இயக்கம்

A - முடியின் கீழான பொறுப்பாட்சியை விரும்பியது

B - இலங்கையில் ஒரு சமதர்ம அரசாங்கத்தைத் தாபிப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது

C - சூரியமல் இயக்கத்தினூடாக பலம் பெற்றது

D - கிராமிய மக்களின் அபிமானத்தை குறுகிய காலத்தினுள் ஏற்படுத்தியது

E - மத்தியதரை வகுப்பைச் சேர்ந்த இடது சாரிக் கருத்துகளையுடைய தீவிர இளைஞர்களால் வழி நடத்தப்பட்டது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

32) 1911 - 1924 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்களால் இலங்கையின் ஆட்சியில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களாவன

A - அதிகரிக்கப்பட்ட அதிகாரத்தோடு, உத்தியோகபற்றற்ற உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்தது

B - தேசாதிபதியின் அதிகாரங்கள் படிப்படியாக அதிகரித்தன

C - இந்திய தமிழர்களும், முஸ்லிம்களும் பிரதிநிதித்துவத்தை பெறலாயினர்

D - இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்து பின்பற்றப்பட்டது

E - தொடர்ந்து நியமன உறுப்பினர் தெரிவும் காணப்பட்டது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

33) இனவாரி பிரதிநிதித்துவமானது

A - 1833 கோல்புரூக் - கமரன் யோசனைகள் மூலம் ஆரம்பிக்கப்பட்டது

B - 1931 டொனமூரில் ஒழிக்கப்பட்டது

C - சிறுபான்மை இனக்குழுக்கள் ஏற்றுக்கொண்டன

D - இனவாத முரண்பாடுகளுக்கு காலாய் அமைந்தது

E - ஜனநாயக பிரதிநிதித்துவத்துக்கு மிகவும் உகந்ததாகும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

34) காங்கிரசின் பிளவினால் ஏற்பட்ட விளைவுகள்

A - பிரித்தானியரின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு அழுத்தம் இல்லாமல் போனமை

B - போராட்ட வழிமுறைகள் மிதவாத வழிமுறையாகவும், செயற்றிறன் அற்றதாகனவும் இருந்தமை

C - இடது சாரி இலக்கம் தோற்றம் பெறுவதற்கான சூழலை ஏற்படுத்தியமை

D - சுதந்திரத்தை பெறுவதற்கு மட்டும் உடைவின் பின்னரும் ஒன்று சேர்ந்து பணியாற்றியமை

E - கரைநாட்டு தோட்டச் சொந்தக்காரர்கள் தரகு முதலாளிகளாக மாறியமை

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

35) 1930களில் இலங்கையின் நிலைமை

A - கிராமிய மக்கள் கவனிப்பாரற்று விடப்பட்டமை
B - மலோரியா நோயின் தீவிரதாக்கம்
C - வாழ்வாதார விவசாயம் பாதிக்கப்பட்டு, பொருளாதார மந்த நிலை ஏற்பட்டமை
D - பிரித்தானியரின் சமூக நலப்பணிகள் அதிகரித்தமை
E - தொழிலாளர்களுக்கு உரிய தலைமைத்துவம் வழங்கக்கூடிய நபர்களின் பற்றாக்குறை

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

✦ **36 முதல் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுகள் பிழையானவையாகும். பிழையான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.**

(36) 1931 டொனமூர் சீர்திருத்தங்களுக்கான பின்னணி,

A - பொறுப்புகள் அதிகாரங்கள் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன
B - மனிங் அரசியல் முறையில் காணப்பட்ட குறைபாடுகள்
C - சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படாமை
D - இலங்கை தலைவர்களின் சீரான செயற்பாடுகள்
E - இடது சாரி இயக்கம் வீழ்ச்சி கண்டிருந்தமை

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

37) டொனமூர் குழுவினரிடம் இலங்கையர்கள் முன்வைத்த கோரிக்கைகள்

A - தேசாதிபதியின் கீழ் தொடர்ந்து ஆளப்பட விரும்பினர்
B - கபினட் அரசாங்க முறையை விரும்பவில்லை
C - தொழிலாளர் தலைவர்கள் சர்வசனவாக்குரிமையை ஏற்கவில்லை
D - சிறுபான்மையினர் இனவாரிப்பிரதிநிதித்துவத்தைக் கோரினர்
E - இலங்கை தலைவர்கள் சர்வசன வாக்குரிமையை ஆதரித்தனர்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

38) 1931 டொனமூரின் அரசாங்க சபை

A - இரண்டு பகுதியான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது
B - எட்டுப்பேர் இனவாரி அடிப்படையில் நியமிக்கப்பட்டனர்
C - அவசர கால வேளைகளிலும் அரசுக்கழகம் கலைக்கப்படலாம்
D - சட்டவாக்க அதிகாரத்தை மட்டும் பிரயோகித்தது
E - எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் ஜனநாயகத்தைப் பலப்படுத்தின

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

39) டொனமூர் நிறைவேற்றுக் குழுவின் பணியானது

A - தமது இலக்காக்களுக்குரிய வருடாந்த மதிப்பீடுகளை மேற்கொள்ள அரசுக்கழக உறுப்பினர்கள் செயற்பட்டனர்
B - நிறைவேற்றுக் குழுக்கள் தமது பணிகளை சிறப்பாக மேற்கொண்டன
C - நிறைவேற்றுக் குழுவின் தலைவர், எவ்வித நிபந்தனையுமின்றி அமைச்சரானார்
D - நிறைவேற்று விடயங்கள் அவர்களுக்கு இரண்டாம் பட்சமாக காணப்பட்டது
E - மேலதிக மதிப்பீடுகளை தயாரிப்பதிலும் ஈடுபட்டனர்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

40) டொனமூர் அரசாங்கத்தின் கீழிருந்த மந்திரமார் சபை

A - பத்து உறுப்பினர்களைக் கொண்டிருந்தது

B - ஓர் ஒருமைத்தன்மையான சபையாக இருந்தது

C - கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டது

D - அரசாங்க சபைக்கு பொறுப்புக் கூறுவதிலிருந்து விடுபட்டது

E - சபாநாயகரால் தலைமை தாங்கப்பட்டது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

✦ **41 முதல் 50 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் மாத்திரம் சரியானவையாகும் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

41) கோல்பரி அரசியல் யாப்பு

A - பிரித்தானியர்களால் தயாரிக்கப்பட்ட, சுதந்திர இலங்கையின் முதல் யாப்பாகும்

B - சிறுபான்மையினரின் காப்பீடுகளுக்கான விடயங்களை உள்ளடக்கியது

C - இருமன்ற முறையிலமைந்த பாராளுமன்றத்தை உருவாக்கியது

D - பிரதமர் தலைமைதாங்கும் கபினட் முறையை ஏற்படுத்தியது

E - பிரித்தானிய அரசாங்கத்துடனான சகல தொடர்புகளையும் துண்டித்தது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

42) சோல்பரி மகாதேசாதிபதி

A - அரசியல் நிறைவேற்றுத்துறையின் தலைவராவார்

B - இலங்கைப் பிரதமரை கலந்தோலோசித்து, பிரித்தானிய முடியால் நியமிக்கப்பட்டார்

C - முடியின் சம்பிரதாயக் கடமைகளையும் நிறைவேற்றினார்

D - அரசின் தலைவராகச் செயற்பட்டார்

E - சட்ட மூலகங்களுக்கு இறுதியாக ஒப்பமிட்டார்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

43) சோல்பரி பாராளுமன்றம்,

A - கீழ்சபை அதிகாரமுடையதாகவும், மேல்சபை அதிகாரம் குறைந்ததாகவும் ஒழுங்கமைந்தது

B - பதவிக்காலம் ஐந்து வருடங்களாகக் காணப்பட்டது

C - சட்ட ஆக்கத்தில் பூரண இறைமையை அனுபவித்தது

D - பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயங்களை ஒத்திருந்தது

E - நிறைவேற்றுத்துறையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

The National Learning Portal for The General Education

44) சோல்பரியில் செனட்சபை அமைக்கப்பட்டதன் நோக்கங்களாவன

A - பிரித்தானிய பொதுநலவாய நாடுகளில் இவ்வாறான இருமன்ற முறை நிலவியமை

B - சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாத்தல்

C - கீழ்சபையின் தூரப்பார்வையின்றிய சட்டவாக்கத்தை தடுத்தல்

D - இருசபைகளும் சமபல அதிகாரம் பெறவேண்டும் என விரும்பியமை

E - தேர்தலில் போட்டியிட விரும்பாத புத்தி ஜீவிகளை உள்ளீர்த்துக் கொள்ளல்

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE

45) சோல்பரி அரசாங்க முறையின் முக்கிய பண்புகளாவன,

A - பிரித்தானிய மன்னரை தொடர்ந்து ஏற்றுக் கொண்ட அரசாங்கம்

B - பிரதமர் தலைமையிலான கபினட் அரசாங்கம்

C - பிரித்தானியக் கோமஹக் கழகத்தினை உச்சமானதாகக் கொண்ட நீதித்துறை முறை

D - பொதுச் சேவை மற்றும் நீதிச் சேவைகளின் சுதந்திரத்தை பாதுகாத்த இரு ஆணைக்குழுக்கள்

E - தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாம நிருவாகியைக் கொண்டிருந்தது

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE

46) சோல்பரி யாப்பின் குறைபாடுகளாவன,

A - சுதந்திர தேசமொன்றிற்கு பொருந்தாத பல விடயங்களைக் கொண்டிருந்தது

B - பிரித்தானிய பாராளுமன்றம் இலங்கை சார்பாக சட்டமியற்றலாம்

C - மகா தேசாதிபதி முடியின் பிரதிநிதியாவார்

D - சிறுபான்மையினர் காப்பீடுகள் வெற்றியடைந்ததால் பெரும்பான்மையினரின் அதிருப்தி

E - அடிப்படை உரிமைகள் இணைக்கப்படவில்லை

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE

47) 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பு

A - கபினட் அரசாங்கமுறை தொடர்ந்து இடம் பெற்றது

B - சிங்களம் மற்றும் தமிழ்மொழி சம அந்தஸ்துப் பெற்றன

C - பொதுநலவாய அமைப்புடனான தொடர்புகளை தொடர்ந்தது

D - இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு என அழைக்கப்பட்டது

E - இளைஞர் அமைதியின்மை தொடர்பான விடயத்தையும் கருத்திலெடுத்தது

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE

48) 1972 முதலாம் குடியரசு யாப்பு அறிமுகஞ் செய்த புதிய விடயங்களாவன,

A - குடியரசு ஜனாதிபதி  B - தேசிய அரசுப்பேரவை

C - மக்கள் தீர்ப்பு முறை  D - அரசசேவை ஆலோசனை சபை

E - அரசியலமைப்பு நீதிமன்றம்

1) ABCD  2) BCDE  3) ABDE  4) ACDE  5) ABCE

49) 1972 அரசியல் யாப்பின் கீழமைந்த உண்மை நிர்வாகம்

A - பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் கொண்டிருந்தது

B - மந்திரசபை என அழைக்கப்பட்டது

C - ஜனாபதிபதியால் நியமிக்கப்பட்டது

D - தேசிய அரசுப் பேரவையினால் நம்பிகையில்லா தீர்மானத்தின் மூலம் அகற்றப்படலாம்

E - அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு கட்டுப்பட்டிருந்தது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

50) 1972 குடியரசு ஜனாதிபதி

A - அமைச்சரவையின் தலைவராவார்

B - பதவிக்காலம் நான்கு வருடங்களாகும்

C - முப்படைகளின் தலைவராவார்

D - பிரதமரால் நியமிக்கப்பட்டார்

E - நாம நிருவாகியாக செற்பட்டார்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

The National e-learning Portal for The General Education

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

**தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017**

**Term Examination, November - 2017**

FWC

| தரம் :- 13 (2018) | அரசியல் விஞ்ஞானம் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - II

▲ *20 குறு வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.*

(1) பின்வரும் கூற்றுக்களை வெளியிட்ட அறிஞர்களை முறையே குறிப்பிடுக.

i) "அரசியல் என்பது அதிகாரத்திற்கான போராட்டம் அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களை செல்வாக்குக்குட்படுத்துதல்"

ii) "அரசியல் விஞ்ஞானம் என்பது அதிகாரத்துடன் பங்கு கொள்வது பற்றியும் அதனை வடிவமைப்பது பற்றியதுமான கல்வி"

..............................................................................................................

..............................................................................................................

(2) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுக்களாலும் வெளிப்படுத்தப்படும் இரு அரசியல் தாபனங்களையும் முறையே பெயரிடுக.

i) "ஒரு வரையறுக்கப்பட்ட ஆட்சிப்பரப்பில் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் கூட்டம்"

ii) "இறைமையைப் பெறாத போதும், அதனை பிரயோகிக்கும் செயற்படுதாபனமாகவும் மூன்று துறைகளைக் கொண்டதுமாகும்"

..............................................................................................................

..............................................................................................................

(3) இளவரசன் மற்றும் அரசியல் இலக்கணம் ஆகிய நூல்களின் ஆசிரியர்களை முறையே குறிப்பிடுக.

..............................................................................................................

..............................................................................................................

(4) பின்வரும் கூற்றுக்கள் வெளிப்படுத்தும் கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

i) வர்க்க மோதல்களின் விளைவாக அரசு தோற்றம் பெற்றது

ii) அரசு சர்வ வல்லமை பொருந்தியதாகும்

..............................................................................................................

..............................................................................................................

(5) அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டரீதியான ஏற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

(6) பண்புத்தர ரீதியாக அரசியற்பட்சிகளை இரண்டாக வகைப்படுத்தலாம் அவற்றைத் தருக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

(7) இலங்கையில் செயற்படும் அமுக்கக்குழுக்களுள் இரண்டின் பெயர்களை எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

(8) i) "நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான தொடர்பு சேய்மையானதாகும்"

ii) "நிறைவேற்றத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான தொடர்பு மிக நெருங்கியதாக இருப்பதோடு அதன் காரணமாக அவ்விரு நிறுவனங்களும் ஒன்றில் ஒன்று தாங்கியுள்ளன. மேற்குறிப்பிட்ட நிறைவேற்று சட்டத்துறைத் தொடர்புகளைக் காணக்கூடிய இரு அரசாங்க முறைகளையும் முறையே குறிப்பிடுக.

1) ..........................................................................................................................

2) ..........................................................................................................................

(9) சிவில் சமூகமொன்றின் பிரதான இயல்பாக காணக்கூடிய விடயங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

(10) அமெரிக்க காங்கிரசின் இரு சபைகளையும், அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

(11) கோல்புறூக் யோசனைகள் மூலம் உருவாக்கப்பட்ட சட்டசபையின் இரு பிரிவினரையும் அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

(12) இலங்கை இடதுசாரி இயக்கத்தின் ஆரம்பகால நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

The National e-Learning Portal for The General Education

(13) i) பிரித்தானியக் குடியேற்ற நாட்டாட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கான இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு இலங்கையர்களால் தாபிக்கப்பட்ட முதலாவது தேசிய ஒழுங்கமைப்பு யாது?

ii) அது தாபிக்கப்பட்ட ஆண்டியைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

(14) வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்ட அரசியல் யோசனையையும் இனவாரிப் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்ட யாப்பு யோசனையையும், முறையே குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

(15) டொனமூர் யோசனைகளில் அமைச்சரவையில் இடம்பெற்ற இரு பகுதியினரையும், அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

(16) சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட யாப்பு யோசனையையும், எவ்வயதுப்பிரிவினரிலிருந்து வழங்கப்பட்டது என்பதையும் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

(17) சோல்பரி பாராளுமன்றின் இரு சபைகளையும் பெயரிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

(18) சோல்பரியில் நாம நிருவாகமாகவும், உண்மை நிருவாகமாகவும் காணப்பட்ட பகுதியினரைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

(19) இலங்கையை இறைமையும் தன்னாதிக்கமும் பொருந்திய குடியரசாக்கிய யாப்பையும், அதன் உத்தியோக பூர்வ பெயரையும் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

(20) 1972 யாப்பின் கீழ் நிறைவேற்று நிருவாகத்தின் இரு பகுதிகளையும் பெயரிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

The National e-learning Portal for The General Education

**B மற்றும் C பகுதிகளிலிருந்து இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

## பகுதி - B

(1) அரசியல் விஞ்ஞானம் ஒரு பாடத்துறையாக வளர்ச்சியடைந்த விதத்தை விபரிக்குக.(20 புள்ளிகள்)

(2) பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.

i) ஜனநாயக அரசியல் முறைமையில் சிவில் சமூகத்தின் வகிபங்கு

ii) அமுக்கக் குழுக்களின் பணிகள்

(3) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பரிசீலிக்குக.

i) ஜனாதிபதி அரசாங்க முறையின் சாதக பாதக விடயங்கள்

ii) சமஷ்டி அரசாங்க முறையின் சாதக பாதக விடயங்கள்

iii) அரசியற் கட்சிகளின் பணிகள்

iv) தற்கால ஜனநாயக முறையில் அரசியல் யாப்பின் முக்கியத்துவம்

**(10 x2 = 20 புள்ளிகள்)**

(4) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி ஆராய்க.

i) அமெரிக்க ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறை

ii) அமெரிக்க செனட்மன்றின் அதிகாரங்களும் பணிகளும்

iii) இந்திய ஜனாதிபதி தெரியப்படும் முறை அல்லது இந்தி சமஷ்டி முறைமையில் மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான தொடர்புகள்

iv) பொதுக் கொள்கைகளின் இயல்பு அல்லது சர்வதேச அரசியலில் அரசுகளின் தேசிய நலன்கள் **(10 x2 = 20 புள்ளிகள்)**

## பகுதி - C

(5) கோல்புரூக் மற்றும் கமரன் யோசனைகளைக் குறிப்பிட்டு, அவற்றை நடைமுறைப்படுத்தியதால் ஏற்பட்ட விளைவுகளைப் பரிசீலிக்குக. **(20 புள்ளிகள்)**

(6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி பரிசீலிக்குக.

i) இலங்கை தேசிய காங்கிரசின் தரைமைத்துவத்தின் இயல்பு

ii) காங்கிரசில் ஏற்பட்ட தமிழ் - சிங்கள தலைவர்களுக்கிடையிலான முரண்பாடு

iii) சமய மறுமலர்ச்சி இயக் கங்கள்

iv) சூரியமல் இயக்கம் **(10 x2 = 20 புள்ளிகள்)**

(7) 1931 டொனமூர் யோசனைகளின் படி பின்வரும் விடயங்களில் எவையேனும் இரண்டினை விபரிக்குக.

i) அரசாங்க சபை

ii) சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட விளைவுகள்

iii) நிறைவேற்றுக் குழு முறையின் செயற்பாடு

iv) மூன்று அரச காரியதரிசிகள் **(10 x2 = 20 புள்ளிகள்)**

(8) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பரிசீலிக்குக.

i) சோல்பரி யாப்பின் கீழ் சிறுபான்மையினருக்காக வழங்கப்பட்டிருந்த காப்பீடுகள்

ii) சோல்பரி மகாதேசாதிபதி

iii) சோல்பரி பாராளுமன்றின் அதிகாரங்கள், பணி நிலை

iv) சோல்பரி யாப்பானது சுதந்திர நாடொன்றிற்கு பொருந்தாத பல அம்சங்களைக் கொண்டிருந்தது என்பதை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? அதற்கான காரணங்களை முன்வைக்குக.

**(10 x2 = 20 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education